# பேனா பிடிக்கலாம்... பின்னி எடுக்கலாம்...

# சுட்டி ஸ்டார்ஸ் புறப்பட்டாச்சு!

இதோ புறப்பட்டுவிட்டது சுட்டிகளின் புத்தம் புதுப்படை!

சுட்டி விகடனின் பேனா பிடிக்கலாம்... பின்னி எடுக்கலாம்' திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப் பட்ட எழுபது 'சுட்டி ஸ்டார்ஸ்' தங்களது கற்பனைத் திறன்களையும், கை வண்ணங்களையும், எண்ணங்களையும் எழுத்துக்களாக்கி சுட்டி விகடன் அமைத்துக் கொடுத்திருக்கும் புதிய தளத்தில் பயணிக்க இருக்கிறார்கள்.

இவர்களுக்கான ஒருநாள் பயிற்சி முகாம், சுட்டிகளின் வசதிக்காக சென்னையில் ஜூலை 6-ம் தேதியும், திருச்சியில் ஜூலை 12-ம் தேதியும் கோலாகலமாக நடந்து முடிந்தது.



**சென்னையில்–**

நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கிய, குழந்தைகள் நாடக நிபுணர் டாக்டர் வேலு சரவணன், அவருக்கே உரிய துள்ளல் கெட்டப்பில் நிகழ்ச்சியின் இடையிடையே 'என்ட்ரி' கொடுத்து சுட்டிகளை மகிழ்வித்தார்.

நிறைய எதிர்பார்ப்புகளோடும், கனவுகளோடும் உற்சாகம் ததும்ப வந்த சுட்டிகளாலும், அவர்களுடன் வந்த பெற்றோராலும் முகாம் அழகாக களைகட்ட தொடங்கியது.

விகடன் குழுமத்தின் நிர்வாக இயக்குநரும், சுட்டி விகடன் ஆசிரியருமான பா.சீனிவாசன் அவர்களின் வரவேற்புரையுடன் நிகழ்ச்சிகள் தொடங்கின.

"சுட்டி விகடனில் சுட்டிகளின் பங்களிப்பை அதிகரிப்பதற்காக தொடங்கப்பட்டதுதான் இந்த திட்டம். ஆங்கில மோகம் அதிகரித்துவிட்ட இந்த காலத்தில் அழகு தமிழில் எழுதவும், தமிழில் சிந்திக்கவும் சுட்டிகளுக்கு பயிற்சி அளிப்பதே இந்த திட்டத்தின் முக்கிய நோக்கம். வெறுமனே படிப்பு என்பதோடு நிறுத்திக்கொள்ளாமல், சுட்டிகளின்



மற்ற திறமைகளையும், களங்கமில்லாத கற்பனைவளத்தையும் அவர்களுக்கே அறிமுகப்படுத்துவது இந்த திட்டத்தின் முக்கிய இலக்கு. நடக்கும் விஷயத்தை, நேரில் பார்ப்பதை, பேசுவதை எல்லாம் செய்தியாகவோ, சம்பவமாகவோ, நேர்காணலாகவோ சுவை பட எழுதுவது ஒரு திறமை! அதற்கு நேர்மாறாக முழுக்க முழுக்க கற்பனையில் புனையப்பட்ட கதைகளை எழுதுவது மற்றொரு திறமை. இப்படி சுட்டிகளுக்குள் இருக்கும் திறமைகளை வடிவமைக்க இந்த பயிற்சித் திட்டம் உதவும்'' என்று கூறிய ஆசிரியர், பெற்றோர்களிடம், "இன்று நாங்கள் ஒரு மதிப்பீட்டுத் தாள் தருவோம். அதில் உங்கள் சுட்டிகளின் தற்போதைய மதிப்பீடு என்ன என்று நீங்கள் குறித்து தரவேண்டும். இந்த ஒரு ஆண்டு திட்டத்தின் முடிவில் மீண்டும் ஒரு மதிப்பீட்டுத் தாள் தருவோம். அதில் உங்கள் சுட்டிகளுக்கு நீங்கள் தரப்போகும் மதிப்பீடு எவ்வளவு உயர்ந்திருக்கிறது என்பதுதான் இந்தத் திட்டத்தின் வெற்றிக்கான அளவுகோலாகும்!



இதில் பங்கேற்கும் சுட்டிகள் எல்லோருமே சிறந்த பத்திரிகையாளர்களாக வர எனது மனப்பூர்வமான வாழ்த்துக்கள்'' என்றார்.



ராஜ்மோகன்

அடுத்தாக இத்திட்டத்தின் மூலமாக சுட்டிகளுக்கு கிடைக்கப்போகிற ஏராளமான பலன்கள் குறித்து 'போதி' அமைப்பின் இயக்குநர் ராஜ்மோகன் பேசியபோது, "வெறும் படிப்பு... படிப்பு... என்று இருக்கக்கூடிய நமது சுட்டிகள், பல துறை சார்ந்த அறிவையும், அனுபவத்தையும் வளர்த்துக்கொள்ள இத்திட்டம் நிச்சயம் கை கொடுக்கும். எவ்வளவுதான் நன்றாகப் படித்து நிறைய மதிப்பெண்கள் பெற்றாலும், தலைமைப் பண்புகள் சிறந்து விளங்குகிற குழந்தைகள்தான் பிற்காலத்தில் நல்ல தலைவர்களாகவும், மிகச்சிறந்த அறிஞர்களாகவும் உருவாகிறார்கள். தலைமைப்பண்புக்கே உரிய எழுத்தாற்றல், பேச்சாற்றல், குழுமனப்பான்மை, விட்டுக்கொடுத்தல், சகிப்புத்தன்மை, வெற்றி-தோல்வியை அணுகும்முறை போன்ற பல திறன்களையும் வளர்த்துக்கொள்ள 'பேனா பிடிக்கலாம்... பின்னி எடுக்கலாம்' திட்டம் உதவும். அதுமட்டுமல்ல, இந்த சுட்டிகளின் கலைத்திறனை வளர்ப்பதோடு, அவர்களது கல்வி மற்றும் ஆளுமை வளர்ச்சிக்குத் தேவையான பங்களிப்புகளை சுட்டி விகடனும், போதி அமைப்பும் இணைந்து தரப் போகின்றன.

தொடர்ந்து குழந்தைகளை ஊக்கப்படுத்தியும், அவர்களுக்கு என்ன தேவையென அவர்களோடு நெருங்கி கண்டறிந்து வழிகாட்டினாலே போதும். அவர்கள் மிகச்சிறந்த உயரத்துக்கு சென்று புகழ் பெறுவார்கள்'' என்றார்.

அடுத்து சுட்டிகளுக்கு 'கதை இலக்கணம்' சொல்ல வந்தார் சுட்டிகளுக்கான கதைசொல்லி கார்குழலி. "கதைகளை எவ்வாறு எழுதவேண்டும்?, கதைகளுக்கான அனுபவத்தை எங்கிருந்து எப்படி வெளிக்கொண்டு வரவேண்டும்... கதை மற்றும் கட்டுரை போன்றவற்றை எழுதுகிறபோது நாம்